டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.06.2026 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 298 - Madurai | Online Edition

# உலகளாவிய சிக்கல்களுக்கு இடையே இந்தியாவை தற்சார்பு உர மையமாக மாற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

புது தில்லி, ஜூன் 16

கடந்த 12 ஆண்டுகளாக பிரதமர் நரேந்திர மோடியின் தொலை நோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ், உரத்துறை மகத்தான மைல்கற்களை எட்டியுள்ளது. இது இந்தியாவை முழுமையான தன்னிறைவை நோக்கி வழிநடத்துவதோடு, முன்னெப் போதும் இல்லாத உலகளாவிய சந்தை சீர்குலைவுகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்து வருகிறது.

மேற்கு ஆசியாவில் நிலவும் கடுமையான புவிசார் அரசியல் மோதல்களால் உர விலைகள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்திருந்த போதிலும், இயற்கை எரிவாயுவுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த போதிலும், கப்பல் போக்குவரத்து வழித்தடங்களில் பெரும் தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், மத்திய அரசு உரங்களின் விநியோகத்தைத் தடையின்றி உறுதி செய்வதற்காக, ஒரு செயலூக்கமான, போர்க்கால அளவிலான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

2014-ம் ஆண்டு முதல் ஆறு புதிய பிரம்மாண்ட யூரியா ஆலைகள் நிறுவப்பட்டு, அதன் மூலம் ஆண்டு உற்பத்தித் திறன் 76.2 லட்சம் மெட்ரிக் டன்களாக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. மேலும், ஆண்டுக்கு 25.4 லட்சம் மெட்ரிக் டன்கள் ஒருங்கிணைந்த உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு உயர் திறன் யூரியா ஆலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்க உள்ளன.

**பாஸ்பேட், பொட்டாசியம் வளர்ச்சி :** யூரியாவின் வெற்றியைப் பிரதிபலிக்கும் வகையில், பாஸ்பேட், பொட்டாசியம் உர உற்பத்தியானது 2014-15-ம் ஆண்டில் 159.54 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்ததிலிருந்து கணிசமாக அதிகரித்து, 2024-25-ம் ஆண்டில் 211.22 லட்சம் மெட்ரிக் டன் என்ற வரலாற்று உச்சத்தை எட்டியது.

ஹோர்முஸ் நீரிணையைச் சுற்றிக் கப்பல் போக்குவரத்துத் தாமதங்களைக் கையாள்வதற்காக, அரசு மாற்றுப் போக்குவரத்து வழிகளை விரைவாக ஆராய்ந்ததுடன், உலகளாவிய உற்பத்தி யாளர்களிடமிருந்து நேரடியாக மூலப்பொருட்களைப் பெறுவதற் கான வழிமுறைகளையும் மேற்கொண்டது. பிரதமர் நரேந்திர மோடியின் நேரடி வழிகாட்டுதலின் கீழ், ஏழு செயலாளர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் உரத்துறைச் செயலாளர் 10 உயர்மட்ட ஆய்வுக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். இக்குழுக்கள், அமைச்சகங்களுக்கு இடையேயான தடையற்ற ஒருங்கிணைப்பிற்கு உத்தரவாதம் அளித்ததுடன், பெட்ரோலியம், இயற்கை எரிவாயு அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து உள்நாட்டு இயற்கை எரிவாயு விநியோகப் பிரச்சனைகளையும் தீர்த்தன.

**வரலாற்றுச் சிறப்புமிக்க கூடுதல் கையிருப்பு :** வேளாண்மை துறையால் மறுமதிப்பீடு செய்யப்பட்ட 383.9 லட்சம் மெட்ரிக் டன்கள் என்ற மொத்தத் தேவைக்கு எதிராக, வரவிருக்கும் 2026 காரீஃப் பருவத்திற்கான கையிருப்பு, இன்றைய நிலவரப்படி சுமார் 195.79 லட்சம் மெட்ரிக் டன்களாக (51%க்கும் மேல்) உள்ளது.

சர்வதேச பணவீக்க அதிர்ச்சிகளைத் தாங்கிக்கொண்டு, பிரதமர் மோடி தலைமையிலான அரசு விவசாயிகளின் நலன்களுக்கு முதலிடம் அளித்துள்ளது. புவிசார் அரசியல் பிரச்சனைகளால் உலகளாவிய விலைகள் கடுமையாக உயர்ந்தபோதிலும், இந்திய விவசாயிகளுக்கான உரங்களின் சில்லறை விலை ஒரு பைசா கூட உயர்த்தப்படவில்லை.

**யூரியா :** உலகச்சந்தையில் ஒரு மூட்டையின் விலை ரூ.4100-ஐத் தாண்டியுள்ள நிலையில், இந்திய விவசாயிகள் 45 கிலோ மூட்டையை வெறும் ரூ.266.5 என்ற பெரும் மானிய விலையில் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

**டிஏபி :** உலகளவில் 50 கிலோ மூட்டைக்கு ரூ.5,000-க்கும் அதிகமான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இது இந்திய விவசாயிகளுக்கு வெறும் ரூ.1,350-க்கு கிடைக்கிறது.

மத்திய அரசின் மிகவும் பயனுள்ள, உத்திசார்ந்த முன்முயற்சிகள் மூலம், உள்நாட்டு உர உற்பத்தி தொடர்ந்து புதிய உச்சங்களைத் தொட்டு, நாடு ஒரு வலுவான, தடையற்ற இருப்பை உறுதி செய் கிறது. இந்த விரிவான தயார்நிலை, நமது மக்களின் முக்கிய விவசாயத் தேவைகள் தடையின்றிப் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், அவர்களுக்கு அத்தியாவசிய உரங்களை மிக மலிவாக, மானிய விலையில், நம்பகமான, சிரமமற்ற முறையில் வழங்குகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் லாபம் தரும் கால்நடை வளர்ப்பு பயிற்சி

திருச்சி, ஜுன் 16

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, லாபம் தரும் கால்நடை வளர்ப்பு பற்றிய நிலையப் பயிற்சி 20.06.26 (சனிக்கிழமை) அன்று நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் அதிக லாபம் ஈட்டும் துறையான கால்நடை வளர்ப்பில் கால்நடை இனங்களைத் தேர்வு செய்தல், கால்நடை பராமரிப்பு, கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, தீவனப் பயிர்களின் வகைகள், நோய் பராமரிப்பு, செயற்கை கருவூட்டல், பால் உற்பத்தி போன்ற தலைப்புகளின் கீழ் விரிவாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும், அன்று பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் 23வது தவணை வெளியீடு நிகழ்வு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.

பங்கு பெற ஆர்வமுள்ள விவசாயிகள் 0431 2962854, 99424 49786, 88381 26730 என்ற எண்களில் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு நிகழ்ச்சியில் கலந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**உளுந்து பொடி சாதம்**

**தேவைப்படும் பொருட்கள்**

அவல் ஒரு கப்

உளுந்தை முளைக்க வைத்து நன்றாக காய வைத்து ரவை போல் பொடித்தது கால் கப்பு தோல் நீக்கிய சுக்குத்தூள் ஒரு தேக்கரண்டி தோல் நீக்கிய பூண்டு பத்து எண்ணிக்கை தேங்காய் பூ ஒரு கப்பு

**செய்முறை**

உளுந்தை பொடியாக்கும் போது பூண்டு பற்களையும் சேர்த்து பவுடர் ஆக்கவும். பின் மீதமுள்ள ஜாமான்களை எல்லாம் உளுந்தோடு சேர்த்து நன்றாக கலந்து விடவும். பின் அதோடு உளுந்து கலவையை போட்டு நன்றாக கிளறவும்.

இந்த கலவைகளை ஒரு பாத்திரத்தில் போட்டு மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றி சிறிது நேரம் ஊற வைத்து சாப்பிடலாம்.

**பயன்கள்**

உடலுக்கு நல்ல உறுதி அளிக்கிறது. முதுகுவலி, இடுப்பு வலிக்கு மிகவும் சிறந்தது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# விதை விற்பனை நிலையங்களில் சிறப்பு குழுவினரால் திடீராய்வு



மதுரை, ஜுன் 16

விதை சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறை இயக்குநரின் ஆணையின்படி, நடப்பு பருவத்தில் விவசாயிகளுக்கு தேவையான பருவத்திற்கு உகந்த விதைகள் இருப்பு இருப்பது பற்றியும் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுகின்றனவா எனவும் விதை சட்டம் விதை விதிகள் மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் பின்பற்றப்படுகின்றனவா, என்பது பற்றியும் அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்தனர்.

மதுரை மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் அரசு, அரசு சார்ந்த விதை விற்பனை நிலையங்களில் திருநெல்வேலி விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதாபாய் தலைமையில் விதை ஆய் வாளர்கள் விஜயலட்சுமி மற்றும் சண்முகையா ஆகியோர் கொண்ட குழு திடீராய்வு மேற்கொண்டது. ஆய்வின் போது விதை ஆய்வு துணை இயக்குநர் சி.சிங்காரலீனா, விதை ஆய்வாளர்கள் அகிலா மற்றும் ராஜபாண்டி ஆகியோரும் உடன் இருந்தனர். ஆய்வின் போது விதைகள் கட்டுப்பாட்டு ஆணையின்படி விதை உரிமங்கள் பெறப்பட்டுள்ளனவா எனவும் உரிமம் உரிய காலத்தில் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் மற்றும் நடப்பு பருவத்திற்கு தேவையான விதைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும், மேலும் விதை இருப்பு பதிவேடு, விதை கொள்முதல் பதிவேடு, விற்பனைப்பட்டியல், விதை இருப்பு விவரப்பலகை, விலைப்பட்டியல்கள் மற்றும் விதை இருப்பு விவரங்கள் ஆகியவை சரியாக பராமரிக்கப்பட்டுள்ளனவா எனவும் ஆய்வு செய்தனர்.

மேலும், ஆய்வின் போது ரூபாய் 2,84,625 மதிப்புக் கொண்ட 1413 கிலோ எடை உள்ள நெல் மற்றும் காய்கறி விதைகளுக்கு விதை சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை இயக்குநரால் வழங்கப்பட்ட பதிவுச் சான்று பராமரிக்கப்படாத கடைகளுக்கும் மற்றும் முளைப்புத்திறன் சான்று இல்லாத விதை குவியல் களுக்கும் விற்பனை தடை விதிக்கப்பட்டது. ஆய்வின்போது தனியார் மற்றும் அரசு சார்ந்த துறைகளின் கீழ் இயங்கி வரும் விதை விற்பனை நிலையங்களில் இருந்து 19 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று மதுரை விதை ஆய்வு துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# விவசாய நிலத்தை பாதுகாப்போம் இயக்க பயிற்சி நடந்தது

திண்டுக்கல், ஜுன் 16

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி மற்றும் தமிழக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இணைந்து 16.06.26 அன்று திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி வட்ட அலுவலகத்தில் 'கேத் பச்சாவோ அபியான்' (விவசாய நிலத்தை பாதுகாப்போம் இயக்கம்) நடைபெற்றது. உதவி தோட்டக்கலை இயக்குநர் இயக்குனர் சண்முக சுந்தரம் அனைவரையும் வரவேற்று பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதை தொடர்ந்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் கோவிந்தராஜ், மையத்தின் நோக்கம், பணிகள், விளை நில பாதுகாப்பின் அவசியம் பற்றி எடுத்துரைத்தார்.




இந்நிகழ்ச்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் அமுதா, பூச்சிக்கொல்லிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தும் முறைகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், தேசிய பூச்சி நோய் அமைப்பு செயலி, மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் இம்மையத்தை சேர்ந்த உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் ராஜேஸ்வரி மற்றும் நிசிந்தா, உயிரியல் நோய் கட்டுப்பாட்டு காரணிகளை கொண்டு விதை நேர்த்தி செய்வதை குறித்து செயல் முறை விளக்கம் அளித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில் விவசாயிகளுக்கு விதை நேர்த்திக் கான உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் வழங்கப்பட்டு நன்றியுரையுடன் முடிவு பெற்றது. நிகழ்ச்சியில் 39 விவசாயிகள் மற்றும் 5 தோட்டக்கலை அலுவலர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

# பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த 'பண்ணைப் பள்ளி' பயிற்சித் தொடக்கம்!

சேலம், ஜுன் 16

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரம், ஆவணிப்பேரூர் கிழக்கு கிராமத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை மற்றும் அட்மா திட்டத்தின் கீழ், 'பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை' (ICM in Pulses) என்ற தலைப்பிலான பண்ணைப் பள்ளி தொடக்க விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.








இப்பயிற்சித் திட்டத்தின் முதல் அமர்வுக்கு எடப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பூங்கொடி தலைமை தாங்கி, திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும், விவசாயிகள் இதனை எவ்வாறு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் விளக்கிப் பேசினார்.

**நிபுணர்களின் தொழில்நுட்ப உரைகள் :** சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி முல்லைமாறன், கலந்து கொண்டு, பயறு வகை பயிர்களில் மகசூலை அதிகரிப்பதற்கான நவீன பயிர் மேலாண்மை முறைகள் குறித்து விரிவான தொழில் நுட்ப உரையாற்றினார். மேலும், மண்ணின் வளம் மற்றும் பயிர் பாதுகாப்பை வலியுறுத்தும் 'கெத் பச்சாவ் அபியான்' (Khet Bachao Abhiyan) திட்டத்தின் நோக்கம் மற்றும் விழிப்புணர்வு கருத்துக்களை விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டார்.

**விதை பரிசோதனை மற்றும் இயற்கை உள்ளீடுகள் :** ஓய்வு பெற்ற வேளாண்மை உதவி அலுவலர் அர்த்தநாரீஸ்வரன், தரமான விதை தேர்வு, முறையான விதை நேர்த்தி, விதைப்பு முறைகள் மற்றும் பயிர் சாகுபடியில் உயிர் உரங்கள், இயற்கை இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் அவற்றின் நன்மைகள் குறித்து ஒவ்வொரு அம்சத்தையும் விவசாயிகளுக்கு மிகத் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கினார்.

**மண் மாதிரி சேகரிப்பு முறைகள் :** தொடர்ந்து, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் விவசாயத்தில் மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும், விளைநிலங்களில் இருந்து எவ்வாறு சரியான முறையில் மண் மாதிரி சேகரிக்க வேண்டும், மாதிரி எடுக்கும்போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து நேரடி விளக்கம் அளித்தார்.

**விவசாயிகள் வரவேற்பு :** இப்பண்ணைப் பள்ளி பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் எடப்பாடி வட்டார அட்மா திட்ட பணி யாளர்கள் திறம்பட செய்திருந்தனர்.

இப்பயிற்சியில் தேர்வு செய்யப்பட்டு கலந்து கொண்ட பகுதி விவசாயிகள் பேசுகையில், 'இந்த பண்ணைப் பள்ளி வகுப்பு எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்றும், பயறு வகை பயிர் சாகுபடியில் உள்ள பல்வேறு புதிய தொழில் நுட்பங்களை இதன் மூலம் எங்களால் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது' என்றும் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்




தஞ்சாவூர், ஜூன் 16

தஞ்சாவூர் மாவட்டத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்துவதால் பெறும் நன்மைகள் மற்றும் இத்திரவ உரங்களை இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தும் முறை குறித்து விவரித்தார்.

குருணை உரங்களைவிட விலை குறைவு, எடுத்து செலவும் சுலபம். மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன் படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



# மானாவாரி நிலக்கடலை சாகுபடி முறைகள் மற்றும் இயந்திரமயமாக்கல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜுன் 16

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் மானாவாரி நிலக்கடலை சாகுபடி முறைகள் மற்றும் இயந்திரமயமாக்கல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 16.06.26 அன்று தாதன்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன், மத்திய அரசின் திட்டமான கேச் பச்சாவோ அபியான் விளை நிலம் காப்போம் இயக்கம் திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண் வளத்தை மேம்படுத்துதல் திரவ உயிர் உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தினார். வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா, துறை சார்ந்த திட்டங்கள் மானிய விபரங்கள் விளை நிலம் காப்போம் இயக்கம் விவசாயிகளின் தணித்துவ அடையாள எண் பதிவு செய்தல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேற்கண்ட பயிற்சிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு எஸ்.பாண்டீஸ்வரன், மானாவாரி நிலைக்கடலை சாகுபடி முறைகள் மற்றும் இயந்திரமயமாக்கல் தொழில் நுட்பங்கள் மற்றும் விதை நேர்த்தி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தார். தே.கல்லுப்பட்டி வட்டார துணை வேளாண்மை அலுவலர் பு.சீனிவாசன், நுண்ணூட்ட உரக்கலவையின் பயன்கள் மற்றும் உபயோகம் குறித்து விளக்கி பேசினார்.


வட்டார தொழில்நுட்ப மேலாளர் ம.ஹேமலதா நன்றியுரை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பா.மாரிமுத்து, க.துர்கா இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# பவுடராக்கி விற்கப்படும் முருங்கை இலை - எப்படி?



முருங்கை இலை 'ஊட்ட சத்துகளின் பெட்டகமாக' உள்ளது. முருங்கை இலை பொடியில் கேரட்டை விட அதிகமாக வைட்டமின் ஏ-யும், பாலாக்கீரையை விட அதிக மாக இரும்புசத்தும் பாலைவிட அதிகமாக கால்சியமும் நிறைந்துள்ளன.

அதுமட்டுமல்ல இலை பொடியில் உள்ள குளோரோ ஜெனிக் அமிலம் இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது. செரிமானம் மற்றும் மலச்சிக்கலை தடுக்க உதவுகிறது. இத்தகைய மருத்துவ குணமுள்ள முருங்கை இலை பொடியை வேடசந்தூரில் உள்ள 'முருங்கை முதன்மை பதப்படுத்தும் மையம் வாயிலாக அரைத்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விவசாயிகள் எளிதாக சந்தைபடுத்த உதவுகிறது.

**எப்படி மையம் செயல்படுகிறது?**

முருங்கை இலையை நன்றாக நிழலில் உலர்த்தி பதப்படுத்திய பின் முருங்கை இலை பவுடராக மாற்றப்படுகிறது. இதற்காக முருங்கை இலைகளை 3 வகை தரங்களாக பிரித்து வாங்கப்படுகிறது. மர முருங்கை, செடி முருங்கை இலைகளை பவுடராக மாற்றிட பயன்படுத்தப்படுகிறது.

இந்த தரத்திற்கெற்ப 1 கிலோ 8 முதல் 15 வரை கொள்முதல் இந்த மையம் செய்கிறது.

**முருங்கை இலை மகத்துவம்**

சமீப காலமாக முருங்கை இலை பொடிக்கு உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் ஏகப்பட்ட டிமாண்ட் உள்ளது. இதற்கான காரணம் இதிலுள்ள ஊட்டசத்துகள் தான்.

இதற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாக உள்ளது. ஒரு கிலோ, அரை கிலோ என ஆர்டருக்கு ஏற்ப பாக்கெட் செய்து விற்பனை செய்யப்படுகிறது.

**இலைகள் எவ்வாறு வழங்கப்படுகிறது?**

மர முருங்கை விவசாயிகள் கவாத்து எடுக்கும் போது இலை களாக வழங்குகின்றனர். செடி முருங்கை விவசாயிகள் நேரடி யாக இலைகளை பறித்து நிழலில் உலர்த்து வழங்குகின்றனர்.

**இலைகளை பவுடராக மாற்றிய பின் எஞ்சியுள்ள தண்டுகள், காம்புகள் என்ன செய்யலாம்?**

பவுடராக மாற்றிய பின் எஞ்சியுள்ள காம்புகள், தண்டுகளை நறுக்கி பவுடராக மாற்றி கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தலாம்.

எனவே அதிக வருமானம் தரும் முருங்கை இலை சாகுபடியை ஒவ்வொரு விவசாயியும் குறைந்த பட்சமாக 5 செண்ட் பரப்பளவில் சாகுபடி செய்ய லாம் என்பது என்னுடைய கருத்து. நாமும் வருமானம் பெறலாம். கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தலாம்.

**என்ன நீங்க தயாரா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# விவசாயிகளுக்கு பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் தாவர வழிப்பொருட்களின் பயன்பாடு பற்றிய பயிற்சி




ஈரோடு, ஜுன் 16

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் தாவர வழிப்பொருட்களின் பயன்பாடு பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல் படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா திட்டம்) மூலம் ஓண்டிகாரன்பாளையம் கிராமத்தில் விவசாயி களுக்கு பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் தாவர வழிப்பொருட்களின் பயன்பாடு பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இந்த பயிற்சியில் வேளாண்மை அலுவலர் ந.நிவேதா, வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம் விஞ்ஞானி மா.சிவா, பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும், இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும், மேலும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த தாவர வழிப்பொருட்களை தயார் செய்து பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மண் வளம் காக்கப்படும் என்பதை விளக்கமாக கூறினார்.

குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் முனைவர் கே.இளங்கோ (பூச்சியியல் துறை) பூச்சி மற்றும் நோய்களை கட்டுப் படுத்த தாவர வழிப்பொருட்களை தயார் செய்து பயன்படுத்தும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

மகிழம் இயற்கை பண்ணை, ஈரோடு கருப்பண்ணசாமி சன்ன அரிசி நெல் இரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில் நுட்பங்கள், மதிப்பு கூட்டல் செய்தல் போன்ற விபரங்களை விளக்கமாக கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன், உழவன் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.



# விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடுகள் குறித்த பயிற்சி

சேலம், ஜூன் 16



சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டாரம், சின்னசோரகை கிராமத்தில் வேளாண்மைத் துறை அட்மா திட்டம் சார்பாக விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடுகள் என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்திலிருந்து உதவி பேராசிரியர் டாக்டர் ஆனந், கலந்து கொண்டு உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்கள், பயன்படுத்தும் முறைகள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கமாக எடுத்துக்கூறினார்.

மேலும் வேளாண்மைத் துறை திட்டங்களை சாம்பசிவம், உதவி வேளாண்மை அலுவலர் கூறினார் மற்றும் தோட்டக்கலைத்துறை திட்டங்களை தன பாக்கியம், தோட்டக்கலை அலுவலர் விளக்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா, விளைநிலங்களை காப்போம் குறித்த தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர், விவசாயிகள் அனைவருக்கும் ஊக்கத்தொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் மேற்கொண்டனர்.



# அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்வில் இயற்கை விவசாயத்திற்கு மாற அழைப்பு!



கடலூர், ஜூன் 16

ரசாயன உரங்களைத் தவிர்த்து, மண்ணின் வளத்தையும் மனித ஆரோக்கியத்தையும் காக்க விவசாயிகள் அனைவரும் இயற்கை விவசாயத்திற்கு மாற வேண்டும் என்று அண்ணா மலைப் பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட நாட்டார்மங்கலம் கிராமத்தில், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மைப் புல இறுதி ஆண்டு B8 பிரிவு மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, கிராமப்புற மக்களிடையே மண் வள மேம்பாடு மற்றும் நஞ்சில்லா உணவு உற்பத்தி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தற்போதைய சூழலில், அதிகப்படியான ரசாயன உரங்கள் மற்றும் வீரியமிக்க பூச்சிக்கொல்லிப் பயன்பாட்டினால் மண்ணின் நுண்ணுயிர்கள் அழிந்து, மனிதர்களுக்குப் பல்வேறு வாழ்வியல் நோய்கள் ஏற்படுவதை மாணவர்கள் சுட்டிக் காட்டினர். இதற்குச் சிறந்த தீர்வாக, தாராளமாகக் கிடைக்கக்கூடிய மாட்டுச் சாணம் மற்றும் கோமியத்தைக் கொண்டு பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தகரைசல் போன்ற இயற்கை ஊக்கிகளைத் தயாரிக்கும் முறைகளை விவசாயிகளுக்குச் செயல்விளக்கம் மூலம் கற்றுக் கொடுத்தனர்.

மேலும், வேப்பங் கொட்டைக்கரைசல் மற்றும் மூலிகைப் பூச்சி விரட்டிகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, முதலீடே இல்லாமல்

பயிர்களைப் பாதுகாக்கும் சூழலியல் நுட்பங் களையும், பொறி பயிர்களின் முக்கியத்துவத்தையும் விரிவாக எடுத்துரைத்தனர். 'நஞ்சில்லா உணவை உற்பத்தி செய்து, வளரும் தலைமுறைக்கு ஆரோக்கியமான வாழ்வை வழங்குவது நமது கடமையாகும். சந்தையிலும் தற்போது இயற்கை விளைபொருட்களுக்கு நல்ல விலையும், பெரும் வரவேற்பும் கிடைத்து வருகிறது' என மாணவர்கள் விவசாயிகளிடம் விவரித்தனர்.

நாட்டார்மங்கலம் கிராம விவசாயிகளிடையே அண்ணா மலைப் பல்கலைக்கழக B8 பிரிவு மாணவர்களின் இந்த வழிகாட்டுதலும், விழிப்புணர்வு முயற்சியும் பெரும் வரவேற்பையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

# லாபகரமான முறையில் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பண்ணை பள்ளி



திருச்சி, ஜுன் 16

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரம், மருதூர் கிராமத்தில் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் லாபகரமான முறையில் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பண்ணை பள்ளி நடைபெற்றது. இதில் டாக்டர் நீலகண்டன், கால்நடை உதவி மருத்துவர் பேசுகையில், ஆட்டின் வகைகள் மற்றும் ஆடு வளர்க்கும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறை தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிக்கு விரிவாக விளக்கி கூறினார்.

மேலும் குடற்புழு நீக்கம் தீவன மேலாண்மை ஆடு கொட்டகை அமைத்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் பேசுகையில், அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா, செயல்விளக்க திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். இப் பண்ணை பள்ளியில் 30க்கும் மேற்பட்ட மருதூர் கிராம விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பண்ணை பள்ளி ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், உதவி வேளாண்மை அலுவலர் பிரவீன் ஆகியோர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நவீன வேளாண்மையில் வெள்ளாடு விற்பனை வாய்ப்புகள்

## விற்பனை என்றால் என்ன?

விற்பனை என்பது பொதுவாக உற்பத்தியாளர்களின் மிக முக்கிய கடைசி நடவடிக்கையாகும். விற்பனை, உற்பத்தியாளர்களின் உழைப்புக்கும், மூலதனத்திற்கும் இலாபம் அல்லது நட்டம் ஏற்படுவதை நிர்ணயம் செய்யும் செயலாகும். நுகர்வோர்களின் தேவைகளையும் விருப்பத்தையும் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுத்தப்படும் மனித நடவடிக்கையாகும்.

இறைச்சிப் பொருட்களின் விற்பனை பல செயல்பாடுகளை உள்ளடக்கியாதாகும். அவை முறையே உற்பத்தி செய்யுமிடத்தி லிருந்து கொண்டு வந்து இறைச்சியாக மாற்றப்படும் இடத்தில் சேர்க்க வேண்டும். நுகர்வோர்களின் தேவைக்கேற்ப இறைச்சிப் பாகங்களாகவும், மதிப்பூட்டிய இறைச்சிப் பொருளாகவும் மாற்ற வேண்டும், நுகர்வோர்களுக்குத் தேவைப்படும் இடத்தில், தேவை யான அளவில் மற்றும் தேவையான தரமுள்ள இறைச்சியை அளித்திட வேண்டும். இறைச்சிப் பொருட்களின் விற்பனை என்பது உற்பத்தியாளர்களிடமிருந்து கடைசியாக நுகர்வோர்களைச் சென்றடையும் இடமாகச் சில்லறை வியாபாரிகள் வரையிலான எல்லா வழித்தடங்களையும் உள்ளடக்கியதாகும்.

மாறிவரும் சூழ்நிலைகள், போக்குவரத்து வசதிகள் குளிர்பதன முறைகள் போன்றவை இறைச்சிப் பொருட்களின் விற்பனை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. நவீன குளிர்பதன முறைகள் மற்றும் நவீன பாதுகாப்பு முறைகள் இறைச்சிப் பொருட்கள் ஆண்டு முழுவதும் கிடைக்குமாறு உதவுகின்றன.

## விற்பனை இடையீட்டளர்கள்

இறைச்சிப் பொருள் விற்பனையில் பல இடையீட்டாளர்கள் பங்கேற்கின்றனர். இவர்கள் உற்பத்தியாளர்கள் தயார் செய்யும் இறைச்சிப் பொருட்களை நுகர்வோர்களிடம் சுமூகமாகச் சென்று அடைய வழிவகை செய்கின்றனர். மொத்த வியாபாரிகள் சிறு வியா பாரிகள் (சில்லறை வியாபாரிகள்) தரகர்கள் (தரகு, வியாபாரிகள், வியாபாரத் தரகர்கள்) முகவர்கள், போக்குவரத்து நிறுவனங்கள், பண்டகசாலை (கிடங்குகள்) நிதி நிறுவனங்கள், சட்ட அமைப்புகள் (ஆலோசனைகள்) விளம்பர நிறுவனங்கள் முதலியன இறைச்சி விற்பனையில் இடையீட்டாளர்கள் ஆவார்கள்.

இந்த இடையீட்டாளர்கள் வியாபாரிகளைத் தேடுதல், நுகர்வோர் களைக் கண்டறிதல் இறைச்சிப் பொருட்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதிகள், சேமிப்புக் கிடங்குகள் தகவல் தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல், பேரம் பேசி ஒப்பந்தம் செய்தல் உரிமம் மாற்றம் செய்தல் முதலிய பணிகளை செவ்வனே செய்கின்றனர். ஆகவே இறைச்சிப் பொருட்களின் விற்பனையிலும் இதரப் பொருட்கள் விற்பனை போல் இடையீட்டாளர்கள் சேவை அவசியமா கின்றது இவர்களது சேவையை அறவே அகற்ற முடியாது.

### விற்பனை வழி முறைகள்

இறைச்சிப் பொருட்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து கடைசியாக நுகர்வோர்களைச் சென்றடையும் வழிதான் விற்பனை வழி முறை எனப்படும். இதில் பலதரப்பட்ட இடையீட்டாளர்கள் பங்கேற்கின்றனர்.

கீழ் காணும் வழிமுறைகளில் இறைச்சிப் பொருட்கள் விற்பனையாகின்றன.

- இறைச்சிப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரி இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர்கள் சிறு / சில்லறை வியாபாரி நுகர்வோர்
- இறைச்சிப் உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரி உணவு விடுதி / விரைவுச் சிற்றுண்டி நுகர்வோர்.
- இறைச்சி உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரி இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர் சங்கிலி தொடர் கடைகள் நுகர்வோர்
- இறைச்சி உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர்கள் சிறு சில்லறை வியாபாரி நுகர்வோர்.
- இறைச்சி உற்பத்தியாளர் மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர் சிறு சில்லறை வியாபாரி நுகர்வோர்.
- இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர்கள் நுகர்வோர்

### சங்கிலி தொடர் கடைகள்

இவ்வகைச் சங்கிலி / தொடர் கடைகள் இப்போது அதிகமாகப் பரவி வருகின்றன. இந்தத் தொடர் கடைகள் பால் மற்றும் இறைச்சிப் பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ளன. இம்முறை நுகர்வோர் களுக்கு மிகவும் வசதியாக இருக்கின்றது. இவ்வகை விற்பனையில் இடையீட்டாளர்கள் பங்கு மிகவும் குறைவு. ஆகவே விற்பனை செலவும் குறைகின்றது. நுகர்வோர் அளிக்கும் விலையில் அதிகப் பங்கு உற்பத்தி செய்பவர்களுக்கு கிடைக்கின்றது.

### சிறு / சில்லறை வியாபாரிகள்

பொருட்களின் விற்பனையில் சிறு/சில்லறை வியாபாரிகளின் பங்கு

மிக முக்கியமானதாகும். ஏனெனில் நுகர்வோர்களால் பல இடங்களில் வசிப்பதால் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிறு / சில்லறை வியாபாரிகளின் பங்கு பாராட்டுக்குரியதாகும். இந்த வியாபாரிகள் குளிர்பதனப் பெட்டிகள் உறைபதன வசதி தூய்மையான இட வசதி மின்சார வசதி போன்றவை ஏற்படுத்தி அவர்களின் தேவைக்கேற்ற வண்ணம் மொத்த வியாபாரிகள் அல்லது பொருட்கள் தயாரிப்பாளர்களிடமிருந்து (பெரும்பாலும் வாரம் ஒரு முறை) உடனுக்குடன் பெற்று விற்பனை செய்கின்றனர்.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***




# தேனி மாவட்டத்தில் விதை ஆய்வு அதிகாரிகள் ஆய்வு



தேனி, ஜுன் 16

நடப்புப் பருவத்தில் விவசாயிகளுக்குத் தரமான நெல், உளுந்து, மக்காச்சோளம், கம்பு, சோளம் மற்றும் காய்கறிப் பயிர்களின் விதைகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்ய சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தேனி மாவட்டத்தில் திருநெல்வேலி விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதாபாய் மற்றும் மதுரை விதை ஆய்வு துணை இயக்குநர் சிங்கார லீனா ஆகியோர் தலைமையில் விதை ஆய்வாளர்கள் கொண்ட சிறப்பு குழு விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு நடத்தினர்.

இந்த ஆய்வின் போது விதை விற்பனை நிலையங்கள் அரசு உரிமம் பெற்றுள்ளனவா, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப் படும் விதை பைகளில் உள்ள அட்டைகளில் பயிர் சாகுபடி செய்யப் படும் பருவம், ரகம், குவியல் எண், காலாவதி நாள் ஆகியவை சரியாக உள்ளதா எனவும், விற்பனை செய்யப்படும் உண்மை நிலை (TFL) ரகங்களுக்கான தமிழ்நாடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்று இயக்குநரால் வழங்கப்படும் பதிவுச்சான்று உள்ளதா என்று ஆய்வு செய்தனர். ஆய்வின் போது விற்பனைக்கு இருப்பு வைக்கப்பட்ட விதைக்கு விலைபட்டியல், முளைப்புத்திறன் அறிக்கை பதிவு சான்றுகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ரசீதுகள் ஆகியவை சரிபார்க்கப்பட்டன.

மேலும், விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனையாளர் களிடம் மட்டும் விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும். விதை உரிமம் பெறாமல் விதை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தனியார் விதை விற்பனையாளர்கள் இரசீது இல்லாமல் விற்றாலோ, கூடுதல் விலைக்கு விற்பனை செய்தாலோ விதைச்சட்டம் 1966 விதை விதிகள் 1968 மற்றும் விதை கட்டுப் பாட்டு ஆணை 1983 ஆகியவற்றின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என எச்சரித்தனர். மேலும், பதிவுச்சான்று இல்லாத காய்கறி விதை குவியல்களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டு இனி வரும் காலங்களில் பதிவுச்சான்று இல்லாமல் விதை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தனர்.

# நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்

மதுரை, ஜூன் 16

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில், தனிச்சியம் கிராமத்தில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் 16.06.26ம் தேதி அன்று நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் நெற்பயிரிடும் 100 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், விளைநிலம் பாதுகாப்போம் இயக்கம் கேத் பச்சோ அபியான இயக்கத்தின் மூலம் இயற்கை விவசாயம் மற்றும் மண்வள பாதுகாப்பு விவசாயிகள் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாமில் எடுத்துக் கூறியதாவது சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், மண் ஆரோக்கியத்தை மேம் படுத்துதல், மண் வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற் கொள்வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது,காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, பசுந்தாள் உரப்பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

மதுரை மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை மூத்த விஞ்ஞானி பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் மு.சுரேஷ் திருந்திய நெல் சாகுபடி முறைகளான நிலத்தேர்வு, 2 கிலோ குறைவான விதையளவு, உயிரியல் பூஞ்சாண நோய் கட்டுப்பாடு விதை நேர்த்தி, ஒரு செண்ட் நாற்றங்கால், 12-14 வயதுடைய இளநாற்றுகள் நடவு செய்தல், 22.5X22.5 செ.மீ இடைவெளி சதுர முறையில் ஒற்றை நாற்று நடவு, பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, கோனோவீடர் மூலம் களை நிர்வாகம், இலை வண்ண அட்டை கொண்டு தழைச்சத்தை தேவைக்கேற்ப பிரித்து இடுதல், நீர் மறைய நீர் கட்டுதல், நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் அதிகம் காணப்படுவதால் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறை களான இயற்கை முறைகளான பஞ்சகாவ்யம், வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு, மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இன கவர்ச்சி பொறி பயன்படுத்துவதோடு இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா

ரைசோபியம் ஆகியவற்றினை பயன்படுத்துமாறும் முக்கியமாக விவசாயிகள் அனைவரும் சான்றுபெற்ற விதைகளை பயன்படுத்து மாறும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து விவசாயிகள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் பதிலுரை தெரிவித்தார்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்த குமார், விவசாயிகளின் தனித்துவ அடையாள எண், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் பால்பாண்டி, வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத்திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். விவசாயிகள் முகாம் முடிவில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகள் குறித்த தொழில்நுட்ப கருத்துக்கள் அடங்கிய பயிற்சி கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப் படுத்தும் முகாமில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பேரணி நடைபெற்றது.

முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். இம்முகா–மிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலா ளர்கள் சௌந்தரராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.



# புதிய சன்ன அரிசி நெல் இரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாயிகளுக்கு பயிற்சி




ஈரோடு, ஜுன் 16

ஈரோடு வட்டாரம், பவானி வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் மூலம் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சியானது செட்டிபாளையம் கிராமத்தில் 15.06.26 நடைபெற்றது. இதில் புதிய சன்ன அரிசி நெல் இரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குநர் ம.கனிமொழி, துவக்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் முருகேசன் உயிரியல் காரணிகளான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா தயாரிப்பு மற்றும் பயன்படுத்தும் முறை குறித்து எடுத்துக் கூறினார். இப்பயிற்சியில் குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியை செல்வகுமார், கலந்து கொண்டு மண் பரிசோதனை முடிவின் அடிப்படையில் சமச்சீர் முறையில் உர மேலாண்மை மேற்கொள்ள வேண்டும் என்றும் நெற்பயிரில் புதிய இரங்கள், நீர் மேலாண்மை, உர மேலாண்மை மற்றும் சாகுபடி முறை குறித்து எடுத்துக்கூறினார்.

வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம் விஞ்ஞானி சீனிவாசன், பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும். மேலும் உயிர் உரங்கள் உயிரில் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்த வேண்டும். இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர் மல்லீஸ்வரி, ஆகியோர் கலந்து கொண்டு வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் கங்கா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பூங்கோதை, சதீஸ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்

அரியலூர், ஜூன் 16

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையின் மூலம் தமிழக அரசு ஆணைப்படி வட்டாரத்தில் உள்ள டெல்டா கிராமங்களில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் இயந்திர நடவு முறை மற்றும் நேரடி நெல் விதைப்பு மூலம் நெல் சாகுபடி செய்துள்ள டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4000 பின்னேற்பு மானியமாக வழங்கப்பட உள்ளது.

இம்முறையில் நடவு மேற்கொண்டுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் முன்பதிவு செய்ய வேண்டும். தங்களது ஆதார் அட்டை நகல், கணிணி சிட்டா, அடங்கல், வங்கிக் கணக்கு புத்தக நகல், இயந்திர நடவு முறையில் நெல் நடவு செய்துள்ள வயலின் புகைப்படம், இயந்திர நடவு செய்ததற்கான இரசீது ஆகிய ஆவணங்களை தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் ஒப்படைத்து பயனடையலாம்.

குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான உயிர் உரங்கள், நுண் சத்து, எதிர் பூஞ்சாண உயிரிகள் ஜெயங்கொண்டம் வேளாண் விரிவாக்க மையம் மற்றும் மீன்சுருட்டி துணை வேளாண் விரிவாக்க மையக் கிடங்குகளில் விவசாயிகள் 50 % சதவீதம் மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தெரிவித்துள்ளார். உழவன் செயலியில் முன்பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயல் படுத்தப்படும்.

மேலும் விபரங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மக்காச்சோள பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மாவட்ட அளவிலான பயிற்சி




சேலம், ஜூன் 16

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரம் கூடமலை அருகே உள்ள கரட்டூர் கிராமத்தில் மக்காச்சோள பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான பயிற்சி நடைபெற்றது.

இது வேளாண்மை உதவி இயக்குனர் மோகன சரிதா தலைமையேற்று விளைநிலங்களை காப்போம் அவசியத்தை எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேளாளர் வரவேற்று பேசினார். மக்கள் நல சங்க தொண்டு நிறுவன மேலாளர் எம் ஜி வெங்கடேசலம் கலந்து கொண்டு மக்காச்சோள பயிரில் விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். உப்பிலியபுரம் ஆர் கே வேளாண்மை சேவை மைய நிறுவனர் உமர் கலந்து கொண்டு மக்காச்சோள பெயரில் உரை மேலாண்மை பற்றி எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் நந்தகுமார் விவசாய அடையாள எண் அவசியத்தை பற்றியும் பதிவேற்றம் செய்யாதவர்கள் பதிவேற்றம் செய்யபட்டது. இதில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கர், பிரபா ஆகியோர் செய்து இருந்தனர்.

